©
தமிழ் நாடு அரசு
2014

[Regd. No. TN/CCN/467/2012-14.
[R. Dis. No. 197/2009.
[விலை : ரூ. 3.20 காசு

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 46] சென்னை, புதன்கிழமை, டிசம்பர் 3, 2014
கார்த்திகை 17, ஜய, திருவள்ளுவர் ஆண்டு–2045

# பகுதி II—பிரிவு 2 இன் இணைப்பு

## அரசாங்க அறிவிப்புகளின் தமிழ் மொழிபெயர்ப்புகள்

### தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை

### அறிவிக்கைகள்

*[அரசாணை நிலை எண் 283, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I.2)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

**அறிவிக்கை-I**

**1996–**ஆம் ஆண்டு கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டம் (மத்தியச் சட்டம் 27/1966) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (2)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 24–03–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–ல் 129–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/161/2010–ஆம் எண் அறிவிக்கையில், பின்னர் திருத்தப்பட்டவாறு, பின்வரும் திருத்தத்தினை இதனால் செய்கிறார்.

**திருத்தம்**

மேற்சொன்ன அறிவிக்கையில் ‘‘தொழிற்சாலைகளின் கூடுதல் தலைமை ஆய்வாளர்’’ என்ற சொற்றொடருக்குப் பதிலாக, ‘‘தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு இயக்குநர்’’ என்ற சொற்றொடரினை அமைத்துக் கொள்ளவேண்டும்.

*[அரசாணை நிலை எண் 283, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I.2)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

**அறிவிக்கை-II**

**1996–**ஆம் ஆண்டு கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டம் (மத்தியச் சட்டம் 27/1966) 42 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (3)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 24–03–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–ல் 130–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/162/2010ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்தும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழேயுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, **ஆய்வாளர்களாக** நெடும்பத்தி (3)–இல் கண்டுள்ள நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள உள்ளூர்ப்பகுதிகளுக்குப் பொறுப்பாக்கி, இதனால் நியமனம் செய்கிறார்.

**அட்டவணை**

| *தொடர் எண்.* | *அலுவலர்கள்* | *உள்ளூர்ப் பகுதிகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு முதுநிலை கூடுதல் இயக்குநர், சென்னை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |

| தொடர் எண். (1) | அலுவலர்கள் (2) | உள்ளூர்ப் பகுதிகள் (3) |
|---|---|---|
| 2. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு இணை இயக்குநர், சென்னை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |
| 3. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு இணை இயக்குநர், மதுரை. | தமிழ்நாடு மாநிலம் முழுவதற்கும் |
| 4. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், சென்னை. | சென்னை மற்றும் திருவள்ளூர் மாவட்டங்கள் |
| 5. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, சென்னை. | சென்னை மாவட்டம் |
| 6. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, சென்னை. | திருவள்ளூர் மாவட்டம் |
| 7. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், காஞ்சிபுரம். | காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| 8. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, காஞ்சிபுரம். | காஞ்சிபுரம் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள் |
| 9. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, காஞ்சிபுரம். | வேலூர், விழுப்புரம் மற்றும் கடலூர் மாவட்டங்கள் |
| 10. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், சேலம். | சேலம், நாமக்கல், தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள் |
| 11. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, சேலம். | சேலம் மாவட்டம் (ஓமலூர், கெங்கவல்லி, ஆத்தூர், வாழப்பாடி வட்டங்கள் நீங்கலாக) மற்றும் நாமக்கல் மாவட்டம். |
| 12 | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, சேலம். | தருமபுரி மற்றும் கிருஷ்ணகிரி, மாவட்டங்கள் மற்றும் சேலம் மாவட்டத்தில் ஓமலூர், கெங்கவல்லி, ஆத்தூர், வாழப்பாடி வட்டங்கள் |
| 13. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், கோயமுத்தூர். | கோயமுத்தூர், நீலகிரி மற்றும் திருப்பூர் மாவட்டங்கள் |
| 14. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, கோயமுத்தூர். | கோயமுத்தூர் மாவட்டம். |
| 15. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, கோயமுத்தூர். | திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |
| 16. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி, அரியலூர், பெரம்பலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். |
| 17. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, திருச்சிராப்பள்ளி. | திருச்சிராப்பள்ளி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்கள். |
| 18. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, திருச்சிராப்பள்ளி. | அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்கள். |
| 19. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், திண்டுக்கல். | ஈரோடு, கரூர், தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்கள். |
| 20. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, திண்டுக்கல். | திண்டுக்கல் மற்றும் தேனி மாவட்டங்கள். |
| 21. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, திண்டுக்கல். | ஈரோடு மற்றும் கரூர் மாவட்டங்கள். |
| 22. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், மதுரை. | மதுரை, புதுக்கோட்டை, சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். |
| 23. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, மதுரை. | மதுரை மற்றும் புதுக்கோட்டை மாவட்டங்கள். |
| 24. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, மதுரை. | சிவகங்கை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்கள். |

| *தொடர் எண்* | *அலுவலர்கள்* | *உள்ளூர்ப் பகுதிகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 25. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு துணை இயக்குநர், திருநெல்வேலி. | திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |
| 26. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-I, திருநெல்வேலி. | திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்கள். |
| 27. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு உதவி இயக்குநர்-II, திருநெல்வேலி. | தூத்துக்குடி மற்றும் விருதுநகர் மாவட்டங்கள். |

*[அரசாணை நிலை எண் 283, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I.2)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

## அறிவிக்கை-III

1996–ஆம் ஆண்டு கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டம் (மத்தியச் சட்டம் 27/1966) 6 ஆம் பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 24–03–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–ல் 130 முதல் 132 வரையிலான பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/163/2010ஆம் எண் அறிவிக்கையினை ரத்து செய்தும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள் கீழேயுள்ள அட்டவணையின் நெடும்பத்தி (2)–இல் குறிப்பிட்டுள்ள அலுவலர்களை மேற்சொன்ன சட்டத்தின் செயல் நோக்கத்திற்காக, நெடும்பத்தி (3)–இல் கண்டுள்ள நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ள எல்லைகளை வரையறையிட்டு இதனால் நியமனம் செய்கிறார்.

### அட்டவணை

| *தொடர் எண்* | *அலுவலர்கள்* | *எல்லைகள்* |
|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* |
| 1. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு இணை இயக்குநர், சென்னை. | சென்னை, திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர், திருவண்ணாமலை, கடலூர், விழுப்புரம், தருமபுரி, சேலம், நாமக்கல் மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்கள். |
| 2. | தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு இணை இயக்குநர், மதுரை. | மதுரை, சிவகங்கை, இராமநாதபுரம், திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி, தேனி, கரூர், ஈரோடு, விருதுநகர், திருச்சிராப்பள்ளி, பெரம்பலூர், அரியலூர், தஞ்சாவூர், திருவாரூர், திண்டுக்கல், புதுக்கோட்டை, நாகப்பட்டினம், கோயம்புத்தூர், திருப்பூர் மற்றும் நீலகிரி மாவட்டங்கள். |

*[அரசாணை நிலை எண் 283, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு (I.2)த் துறை, 11 டிசம்பர் 2013.]*

## அறிவிக்கை-IV

1996–ஆம் ஆண்டு கட்டிடங்கள் மற்றும் ஏனைய கட்டுமானத் தொழிலாளர்கள் (வேலைவாய்ப்பினை முறைப்படுத்தலும் பணிநிலைமைகளும்) சட்டம் (மத்தியச் சட்டம் 27/1966) 9 ஆம் பிரிவைச் சேர்ந்த உட்பிரிவு (1)–இல் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 24–03–2010 ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II, பிரிவு 2–ல் 132–ஆம் பக்கத்தில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறையின் II(2)/LE/164/2010 ஆம் எண் அறிவிக்கையில், இதனால் பின்வரும் திருத்தம் செய்கிறார்.

### திருத்தம்

மேற்சொன்ன அறிவிக்கையில் “தொழிற்சாலைகளின் இணை தலைமை ஆய்வாளர்,” என்ற தொடருக்குப் பதிலாக, “தொழிலகப் பாதுகாப்பு மற்றும் நலவாழ்வு முதுநிலை கூடுதல் இயக்குநர்” என்ற தொடரினை அமைத்துக் கொள்ள வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 2, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை, 27 ஜனவரி 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதி, 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவு ஆகியவற்றில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 25—6—2003 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II, பிரிவு 2—ல் 263 மற்றும் 264 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II (2)/LE/460/2003 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையினை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், ஆலோசனைக்குழுவுடன் கலந்தாலோசித்த பின்னர், தமிழ்நாடு மாநிலத்தில் கல்வி நிலையங்களில், அதாவது, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படாமல், அரசு உதவி பெறாமல் வணிக நோக்கத்தில் நடத்தப்படும் டுடோரியல் கல்லூரிகள், தொழிற்கல்வி பயிலகங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப் பள்ளிகள் போன்றனவற்றில் பணியமர்த்தப்பட்டுள்ள கீழ்க்காணும் விவர அட்டவணையின் (1) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணிகளைச் செய்கிற தொழிலாளர்களுக்கு வழங்கத்தக்க குறைந்தளவு ஊதிய வீதங்களை அந்த விவர அட்டவனையின் (2) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிட்டுள்ளவாறு இதனால் திருத்தியமைக்கிறார். இதன் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5 ஆம் பிரிவைச்சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் சொல்லியுள்ளவாறு ஏற்கெனவே வெளியிடப்பட்டுள்ளது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்தும், அந்நாள் முதற்கொண்டும் செயலுக்கு வரும்.

**விவர அட்டவணை**

**கல்வி நிலையங்களில், அதாவது, அரசு மற்றும் உள்ளாட்சி அமைப்புகளால் நடத்தப்படாமல், அரசு உதவி பெறாமல் வணிக நோக்கத்தில் நடத்தப்படும் டுடோரியல் கல்லூரிகள், தொழிற்கல்வி பயிலகங்கள், தொடக்க மற்றும் மழலையர் பள்ளிகள், ஆங்கிலவழிப் பள்ளிகள் போன்றனவற்றில் வேலைவாய்ப்பு.**

| *பணியாளர்களின் வகைகள்* (1) | | *திங்களொன்றுக்கு குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* (2) | | |
|---|---|---|---|---|
| | | *மண்டலம்* A (*ரூ. பை.*) | *மண்டலம்* B (*ரூ. பை.*) | *மண்டலம்* C (*ரூ. பை.*) |
| **கற்பிக்கும் பணியில் ஈடுபடாத பணியாளர்கள்—** | | | | |
| (அ) | எழுத்தர் / தட்டச்சர் / காசாளர் / நூலகர் | 5532.00 | 5360.00 | 5188.00 |
| (ஆ) | ஓட்டுநர் | 5360.00 | 5188.00 | 5016.00 |
| (இ) | அலுவலக உதவியாள் / தோட்டப் பணியாளர் / ஆயா / காவலாள் | 4500.00 | 4414.00 | 4328.00 |
| (ஈ) | துப்புரவுப் பணியாளர் | 4414.00 | 4328.00 | 4242.00 |

**விளக்கங்கள்:—** (1) மண்டலங்களின் வகைப்பாடு:—மண்டலங்களின் வகைப்பாடு பின்வருமாறு:—

A-B மற்றும் C மண்டலங்களில் கீழ்க்காணும் பகுதிகள் அடங்கும்.

மண்டலம்—A : அனைத்து மாநகராட்சிகள்

மண்டலம்—B : அனைத்து நிலை நகராட்சிகள்

மண்டலம்—C : பேரூராட்சிகள், ஊராட்சிகள் மற்றும் ஏனைய பகுதிகள்.

***(2) அகவிலைப்படி:***மேலே நிர்ணயிக்கப்பட்ட குறைந்தளவு அடிப்படை ஊதியங்களுடன் பணியாளர்களுக்கு கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்:—

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001ஆம் ஆண்டில் 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு, தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள் ஆகும்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி மாதமொன்றுக்கு ரூபாய் 26.30 (இருபத்தாறு ரூபாய் முப்பது காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்பட வேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர சராசரி நுகர்வோர் விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்கவேண்டும்.

(5) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்பட வேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 4, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை, 27 ஜனவரி 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியச் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் பிரிவு 3 ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியின் படிவம் மற்றும் 5 ஆம் பிரிவைச் சேர்ந்த (2) ஆம் உட்பிரிவில் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், 10–10–2012 ஆம் நாளிட்ட **தமிழ்நாடு அரசிதழின்** பாகம் II, பிரிவு 2 இல் 526 மற்றும் 527 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட எண். II (2)/LE/657/2012 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையில் கீழ்க்காணும் திருத்தங்களை, இதனால், செய்கிறார்.

## திருத்தங்கள்

மேற்சொன்ன அறிவிக்கையில்,

(1) 'வரைவு அறிவிக்கை' என்ற தலைப்பின் கீழ் ஆலோசனைக்குழுவுடன் கலந்து ஆலோசித்த பின்னர், என்ற தொடர் விட்டுவிடப்பட வேண்டும்.

(2) 'விவர அட்டவணை' என்ற தலைப்பின் கீழ் (3) ஆம் நெடும்பத்தியில் "மாதமொன்றுக்கான குறைந்தளவு ஊதிய வீதங்கள்" என்ற தொடருக்குப் பதிலாக "குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்" என்ற தொடரினை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(3) "விளக்கங்கள்,–(1) அகவிலைப்படி:–" என்ற தலைப்பின் கீழ்,

(i) "குறைந்தளவு ஊதிய வீதங்கள்" என்ற தொடருக்குப் பதிலாக "குறைந்தளவு அடிப்படை ஊதிய வீதங்கள்" என்ற தொடரினை அமைத்துக்கொள்ளவேண்டும்.

(ii) இனம் (ii) இல் "அகவிலைப்படியின் திருத்தம் செயலுக்கு வரும்" என்ற தொடருக்குப் பதிலாக "அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்" என்ற தொடரினை அமைத்துக்கொள்ளவேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

*[அரசாணை (2D) எண் 42, தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்பு(J1)த் துறை, 4 ஆகஸ்ட் 2014.]*

1948 ஆம் ஆண்டு குறைந்தளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும் மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டு, வெளியிடக் கருதியுள்ள கீழ்க்காணும் அறிவிக்கையின் வரைவு, மேற்சொன்ன சட்டத்தின் 5ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியில் கோரியுள்ளவாறு, அதனால் பாதிக்கப்படக்கூடிய அனைவரின் தகவலுக்காக இதனால் வெளியிடப்படுகிறது.

(2) இந்த அறிவிக்கை, ***தமிழ்நாடு அரசிதழில்*** வெளியிடப்படும் நாளிலிருந்து இரண்டு திங்கள் கால அளவு முடிவடையும் நாளன்று அல்லது அதற்குப் பின்னர் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படுமென்றும், அது தொடர்பாக, மேற்சொன்ன கால அளவான இரண்டு திங்கள் முடிவடைவதற்கு முன்னர், எவரிடமிருந்தேனும் வரப்பெறுகிற மறுப்புரை அல்லது கருத்துரை தமிழ்நாடு அரசால் பரிசீலிக்கப்படுமென்றும், இதனால் அறிவிக்கப்படுகிறது. மறுப்புரை அல்லது கருத்துரை ஏதேனுமிருப்பின், அவற்றை, சென்னை—600 006 இல் உள்ள தொழிலாளர் நல ஆணையாளர் மூலம் அரசு முதன்மைச் செயலாளர், தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை, தலைமைச் செயலகம், சென்னை—600 009 என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

**வரைவு அறிவிக்கை**

1948 ஆம் ஆண்டு குறைந்த அளவு ஊதியங்கள் சட்டத்தின் (மத்திய சட்டம் 11/1948) 3ஆம் பிரிவைச் சேர்ந்த (1) உட்பிரிவின் (b) பகுதியிலும், 5ஆம் பிரிவைச் சேர்ந்த (2) உட்பிரிவிலும் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களைக் கொண்டும், 23—03—2011ஆம் நாளிட்ட ***தமிழ்நாடு அரசிதழின்*** பாகம் II—பிரிவு 2—ல் 140 மற்றும் 141 ஆம் பக்கங்களில் (ஆங்கிலத்தில்) வெளியிடப்பட்ட II(2)/LE/143/2011 ஆம் எண்ணுள்ள தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத் துறை அறிவிக்கையை ரத்து செய்துவிட்டு அதற்குப் பதிலாகவும், தமிழ்நாட்டு ஆளுநர் அவர்கள், தமிழ்நாடு மாநிலத்தில் காளான் வளர்ப்பு மற்றும் தொடர்புடைய பணிகளில் பணியமர்த்தப்பட்டுள்ள, பணியாளர் வகையினருக்கு வழங்கத்தக்க குறைந்த அளவு ஊதிய வீதங்களை, கீழேயுள்ள விவர அட்டவணையின் (2) நெடும்பத்தியில் குறிப்பிடப்பட்டுள்ள பணியாளர் வகையினருக்கு, அந்த விவர அட்டவனையின் (3) நெடும்பத்தியின் நிகரான பதிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு, இதனால் திருத்தியமைக்கிறார்.

**விவர அட்டவணை**

**காளான் வளர்ப்பு மற்றும் தொடர்புடைய பணிகளில் வேலைவாய்ப்பு**

| *தொடர் எண்* | *பணியாளர்களின் வகைகள்* | *மாதமொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள்* | | |
|---|---|---|---|---|
| *(1)* | *(2)* | *(3)* | | |
| | | மண்டலம்— 1 (ரூ.காசு.) | மண்டலம்— 2 (ரூ.காசு.) | மண்டலம்— 3 (ரூ.காசு.) |
| **வகையினம் எண் 1** | | | | |
| | மேற்பார்வையாளர்கள் | **8,847.00** | **8,785.00** | **8,723.00** |
| **வகையினம் எண் 2** | | | | |
| (1) | கணக்காளர் | | | |
| (2) | மின் •பணியாளர் | **7,607.00** | **7,545.00** | **7,483.00** |
| (3) | பாப்கேட் இயக்குபவர்கள் | | | |
| (4) | வளர்ப்போர் | | | |
| **வகையினம் எண் 3** | | | | |
| (1) | ஓட்டுநர்கள் | | | |
| (2) | ஆய்வக தொழில்நுட்பப் பணியாளர் | **6,739.00** | **6,677.00** | **6,615.00** |
| (3) | தேர்ச்சி பெற்ற பணியாளர்கள் | | | |
| **வகையினம் எண் 4** | | | | |
| (1) | தேர்ச்சியற்ற பணியாளர்கள் | | | |
| (2) | காவலாள் | **5,189.00** | **5,041.00** | **4,979.00** |

| தொடர் எண் (1) | பணிகளின் வகைப்பாடு மற்றும் பணியாளர்களின் வகைகள் (2) | நாளொன்றுக்கான குறைந்தளவு அடிப்படை ஊதியங்கள் (ரூ.காசு.) (3) |
|---|---|---|
| (1) | அடுக்கு அமைக்கும் பணியாளர்கள் (I–திருப்புதல், II-திருப்புதல், III-திருப்புதல்) | 191.50 |
| (2) | பங்கர் செயல்பாடு (பங்கர்–I, பங்கர்–II, பங்கர்–III) | |
| (3) | காளான் கருவிழை கலத்தல் | |
| (4) | ப்ளசிங் செயல்முறை (Flussing processing) | |
| (5) | பெட்டியில் வைத்தல் (Casing) | |
| (6) | காளான் எடுத்தல் | |
| (7) | சிப்பமிடுதல் | |
| (8) | நீர் ஊற்றுதல் | |
| (9) | குழி நிரப்புதல் | |
| (10) | ஏனைய பொதுப் பணியாளர்கள் (மேற்சொன்ன வகையினங்களில் சேராதவை) | |

**விளக்கங்கள்:** (1) அகவிலைப்படி:

(i) அகவிலைப்படியானது, 2010 ஆம் ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் விலைக்குறியீட்டு எண்ணுடன் இணைக்கப்பட்டுள்ளது. (அதாவது 2001 = 100 புள்ளிகள் என்பதை அடிப்படையாகக் கொண்டு தற்போது கணக்கிடப்பட்ட 161 புள்ளிகள்). 161 புள்ளிகளுக்கு மேல் உயரும் ஒவ்வொரு புள்ளிக்கும் அகவிலைப்படி திங்கள் ஒன்றுக்கு ரூ. 30.90 (முப்பது ரூபாய் தொண்ணூறு காசுகள் மட்டும்) கூடுதலாக அகவிலைப்படி வழங்கப்படவேண்டும்.

(ii) முந்தைய 12 மாதங்களுக்கான (அதாவது ஜனவரியிலிருந்து டிசம்பர் வரை) சராசரி விலைக் குறியீட்டினை அடிப்படையாகக் கொண்டு, ஒவ்வொரு ஆண்டும் ஏப்ரல் முதல் நாளிலிருந்து அகவிலைப்படி கணக்கிடப்பட வேண்டும்.

(iii) முந்தைய ஆண்டிற்கான சென்னை மாநகர நுகர்வோர் சராசரி விலைக் குறியீட்டு எண்ணை அடிப்படையாகக் கொண்ட முதல் கணக்கீடு, இந்த அறிவிக்கை **தமிழ்நாடு அரசிதழில்** வெளியிடப்படும் நாளிலிருந்து செயலுக்கு வரும்.

(2) மண்டலங்களின் வகைப்பாடுகள் பின்வருமாறு :

**மண்டலம்–1** – அனைத்து மாநகராட்சிகள் மற்றும் அனைத்து நகராட்சிகள்

**மண்டலம்–2** – அனைத்துப் பேரூராட்சிகள், மூன்றாம் நிலை நகராட்சிகள் மற்றும் பாளையங்கள்

**மண்டலம்–3** – மேலே குறிப்பிட்டுள்ள 1 மற்றும் 2 மண்டலங்களில் சேராத ஏனைய பகுதிகள்

(3) பணியின் தன்மை ஒரே மாதிரியாக இருக்கும்போது, ஆண் மற்றும் பெண் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்தில் எவ்வித வேறுபாடும் இருக்கக்கூடாது.

(4) நாள் ஊதியத்தைக் கணக்கிடுவதற்கு மாதாந்திர ஊதியத்தை 26ஆல் வகுக்க வேண்டும்.

(5) மாதாந்திர ஊதியத்தை கணக்கிடுவதற்கு நாள் ஊதியத்தை 30ஆல் பெருக்க வேண்டும்.

(6) மொத்த ஊதியத் தொகையானது, இந்த அறிவிக்கையின் நோக்கமான அடிப்படை ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றின் கூடுதலை அளவுகோலாகக் கொண்டதாக இருக்க வேண்டும்.

(7) தற்போது வழங்கப்பட்டு வரும் ஊதியங்கள், இங்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள குறைந்தளவு ஊதியங்களைக் காட்டிலும் அதிகமாக இருக்குமிடங்களிலெல்லாம் அதே ஊதியம் தொடர்ந்து வழங்கப்படவேண்டும்.

**மோகன் பியாரெ,**
*அரசு முதன்மைச் செயலாளர்.*

(தமிழாக்கம்)

**ந. அருள்,**
*இயக்குநர்,*
*தமிழ் வளர்ச்சி மற்றும்*
*செய்தி (மொழி பெயர்ப்பு)த் துறை.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.